### பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற

# நிதி ஆயோக் கூட்டத்தை பீகார் முதல்வர் நிதிஷ்குமார் புறக்கணித்தார்!

பாட்னா, ஜூலை 29–

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் எதிர்க்கட்சி மாநிலங்கள் முற்றிலுமாக புறக்கணித்ததை தொடர்ந்து புதுடெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன் முதலில் புறக்கணிப்பதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து இந்தியா கூட்டணிக் கட்சிகளாலும் மாநிலங்களை சேர்ந்த முதல்வர்களும் இக்கூட்டத்தை புறக்கணித்தனர்.

இதனிடையே பீகார் முதல்வர் நிதிஷ் குமாரும் இக்கூட்டத்தை புறக்கணித்துள்ளார்.

நிதி ஆயோக்கின் 9வது ஆட்சிக் குழு கூட்டம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய தலைநகரில் உள்ள ராஷ்டிரபதி பவனின் கலாச்சார மையத்தில் நடைபெற்றது.

**பீகார் முதல்வர் நிதிஷ்குமார்**

பல எதிர்க்கட்சி முதல்வர்களின் புறக்கணிப்புக்கு இடையே நிதி ஆயோக்கின் 9வது ஆட்சிக்குழு கூட்டம் தொடங்கியது.

மறுபுறம், RJD மூத்த தலைவரும் செய்தித் தொடர்பாளருமான சித்ரஞ்சன் ககன், நிதிஷ் தனது கூற்றுக்கு மாறாக, ஒன்றிய பட்ஜெட்டில் மகிழ்ச்சியடையவில்லை என்று குற்றம் சாட்டினார், ஏனெனில் ஒன்றிய அரசு உண்மையில் மாநிலத்திற்கு என்ன கொடுத்தது என்பது அவருக்குத் தெரியும்.

”பீகாருக்கான பட்ஜெட் முன்மொழிவுகள் மீது கோபமடைந்த நிதிஷ் உண்மையில் கூட்டத்தைப் புறக்கணித்தார். நரேந்திர மோடி அரசு ரூ.58,000 கோடிக்கு மேல் சிறப்பு நிதியை வழங்கியதாக ஒரு தோற்றத்தை உருவாக்க விரும்பும்போது அவர் ஏன் அதில் கலந்து கொள்ளக் கூடாது என்பது புதிராக உள்ளது. கூட்டத்தில் நிதீஷ் கலந்து கொள்ளாதது சாதாரண விஷயம் அல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

”பழைய திட்டங்களை புதிய திட்டங்களாக மாற்றுவதன் மூலம் ஒன்றிய அரசு மக்களை எவ்வாறு தவறாக வழி நடத்துகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.



நெல்லை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான் ஆகியோர் தலைமையில் ஒன்றிய பா.ஜ.க.அரசை கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனித்தா ஏற்பாட்டில் மகளிர் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

### பள்ளிகளுக்கு முதல்வர் கொண்டுவந்துள்ள காலை உணவுத் திட்டம் உள்பட

# தமிழ்நாட்டின் கல்வித்துறைத் திட்டங்களை உலகின் பல நாடுகள் பின்பற்றுகின்றன!

**சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி சர்ச் பார்க் விளையாட்டு தின நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரை!**

சென்னை, ஜூலை 29-

தமிழ்நாட்டின் கல்வித்துறையில் செயல்படுத்தப்படும் பலத் திட்டங்களை உலகத்தின் பல்வேறு நாடுகள் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன என சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, சர்ச் பார்க், விளை யாட்டுத் தின நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டின் கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் பலத் திட்டங் களை உலகத்தின் பல்வேறு நாடுகள் செயல்படுத்த தொடங்கியுள்ளன என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (27.7. 2024) சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல் நிலைப்பள்ளி சர்ச் பார்க் விளையாட்டுத் தினவிழாவில் சிறப்புரையாற்றினார். அவ்வுரை வருமாறு:

நான் பல பள்ளி விழாக்களில் கலந்துகொள்கிற இந்த வாய்ப்பை தொடர்ச்சியாகப் பெற்றிருக்கிறேன்.



மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தபோதும், வார்டுக்குழுத் தலைவராக இருந்தபோதும், மேயராக இருந்தபோதும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும், தற்போது அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற இந்த சமயத்திலும் கூட பல்வேறு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் என்று பல்வேறு நிர்வாகங்கள் நடத்துகிற நிகழ்வுகளில் பங்கேற்கிற வாய்ப்புகளைத் தொடர்ச்சியாக நான் பெற்றிருக்கிறேன்.

**பெற்றோர்கள் அதிகம் பங்கேற்பது சிறப்பு!**

அந்தந்த விழாக்களில் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும்தான் பெருமளவில் பங்கேற்றிருப்பார்கள். ஆனால் இப்போது நடைபெறுகின்ற இப்பள்ளி விழாவில் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவோ, அவ்வளவையும் விட அதிக அளவில் பெற்றோர்களும் பங்கேற்றிருப்பது என்பதுதான் இந்த விழாவுக்கு மிகப் பெரிய அளவிலான சிறப்பு.

இந்தப் பள்ளியின் தொடக்க விழாப் போட்டிகள், தொன்மை மாறாமல் நாம் விளையாட்டுகளிலும் வீரக்கலைகளிலும், எவ்வாறு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் எவ்வாறு நாம் வீரக்கலைகளிலும், பழந்தமிழர் விளையாட்டுக்களிலும் நாம் எவ்வாறு விளங்கிட வேண்டும் என்பதை நாம் ஊருக்கு உணர்த்திட வேண்டும் என்பதற்காக இந்த அற்புதமான நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக இந்தப் பள்ளியை, அதன் நிர்வா கத்தை நாம் மனதார பாராட்டவும், வாழ்த்தவும், போற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றையக் காலக்கட்டங்களில் இளைய சமுதாயம் இணையதள விளையாட்டுகளில் மூழ்கிக்கிடப்பதை நாம் பார்க்கிறோம். அதனால் மாணவர்களுக்கு மன உளைச்சல், மனஇறுக்கம் போன்ற பல்வேறு வகைகளில் மாணவர்கள், குறிப்பாக இளைய சமுதாயத்தினர் பாதித்து வருகிற நிலையில், பழங்காலத்து வீர விளையாட்டுக்களை வாள் சுழற்றுதல், வில்அம்பு போன்ற பல்வேறு விளை யாட்டுக்கள், இந்தப் பள்ளியின் மூலம் நினைவுபடுத்தப்படுதல் என்பது இந்த பள்ளியில் விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துகிறோம் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சியான ஒன்று.

சர்ச் பார்க் பள்ளி என்றாலே சென்னையின் பிரதான அடையாளங்களில் ஒன்று என்று சொன்னாலும் கூட, தமிழகத்தின் பிரதான அடை யாளங்களில் ஒன்று என்றும் சொன்னாலும்கூட அதில் மிகையொன்று மிருக்காது. அந்த அளவுக்கான மிகச் சிறந்த பள்ளி. அந்தப் பள்ளியில் நடைபெறுகின்ற விழாக்களில் சென்னை மேயராக இருந்தபோதும், பங்கேற்கிற வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தற்போது இந்த வாய்ப்பு பெஞ்சமின் அவர்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதற்கான நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பள்ளியில் பழைய மாணவர்கள் இங்கேகூட, இப்போது இந்த மாணவி அசீலா சான்றிதழ் மற்றும் கேடயத்தைப் பெற்று ஒரு சாதனை மாணவியாக இங்கே வீற்றிருக்கி றார். அவர் பள்ளியில் படித்த போதும் எந்த அளவுக்கு சாதனைப்புரிந்தார். இப்போதும் எந்த அளவுக்கு சாதனையாளராக இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள்.

**ஏராளமான ஆளுமைகள் பயின்ற பள்ளி!**

அதேபோல் இந்தப் பள்ளியில் படித்தச் சென்றவர்கள் எந்தந்த துறைகளில் சாதனைப் படைத்தார்கள் என்பதை நினைத்துப் பார்த்தாலே இந்தப் பள்ளியின் பழம்பெருமைகள் என்பது பெரிய அளவில் பாராட்டப் பட கூடிய ஒன்றாக இருக்கும்.

பெருமதிப்பிற்குரிய நினைவில் வாழும் ஜெயலலிதா அம்மையார் பெயரால் ஒரு கோப்பை வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்தப் பள்ளியின் பழைய மாணவி. 1963-64ஆம் ஆண்டில் இந்தப் பள்ளியில் படித்தவர் என்பது நாம் மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்று.

அதேபோல் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி.கனிமொழி அவர்களும் இங்கேப் படித்தவர்கள் என்பதும், இதேப்போன்று ஏராளமான ஆளுமைகள் இங்கேப் படித்து மிகப்பெரிய அளவில் உயர்ந்து உச்சதில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு சாதனைகளையாளர்களை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

ஆற்காடு நவாப் இந்தப் பள்ளியில் படித்தவர்கள் என்பதும், இந்தியாவின் சிறந்த பத்திரிக்கையாளர்களில் ஒருவராக விளங்குகிற பெருமதிப்பிற்குரிய இந்து ராம் அவர்களும் இங்கே படித்துச் சிறந்திருக்கி றார்கள். டாஃப் (TAFE) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்து கொண்டிருக்கிற மல்லிகா சீனிவாசன் அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவி ஆவார்.

அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சினிமாத்துறையில் புகழ் கொடி நாட்டி சிறந்து விளங்கிய வைஜெயந்தி மாலா அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதும் நாம்மகிழ்ச்சியடையத்தக்க ஒன்றாகும்.

நடனத்துறையில் சிறந்து விளங்கிய அனிதாரத்னம், ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதன்மைச் செயலாளராக இருந்த ரேச்சல் சாட்டர்ஜி, ஐ.ஏ.எஸ்., போர்ச்சுகல் நாட்டின் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய லதா ரெட்டி, காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் அமைச்சரும், காங்கிரசின் மிகப்பெரிய தலைவராக விளங்கிய ஜெயந்தி நடராஜன் அவர்களும், இந்தப் பள்ளியின் பழைய மாணவிகள் என்பதும் நாம் என்றும் புகழடையத்தக்க ஒன்றாகும்.

அதேப்போல் தமிழ்நாட்டின் முதல் பெண் பைலட் ஏ1 உஷா ரகுநாதன் என்பவரும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதெல்லாம் பெருமையடையத்தக்க ஒன்று என்பது மிகப்பெரிய அளவிலான சிறப்பாகும்.

சாரதா மேனன் பயின்ற பள்ளி!

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவர் சாரதா மேனன் என்பவரும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதும், பெல் சேரிப்புச் சங்கத்தின் அறங்காவலராகப் பொறுப்பேற்றிருந்த சீதாவெங்கட்ரமணி என்பவரும் இந்தப் பள்ளியின் பழைய மாணவி என்பதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

இப்போது செயற்கை முறையில் கருத்தரித்தல் என்பதற்கான விழிப்புணர்வு உலகம் முழுவதும் பரவி வருகிறது என்றாலும் தென்னிந்தியாவின் இனப்பெருக்கத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாக இருந்த முதல் முனைவராக இருந்த கமலா செல்வராஜ் அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவியா வார்.

அதேபோல் இந்தியாவில் முதல் வானியற்பியல் துறை நிபுணராக விருந்த டாக்டர் நிர்பமா ராகவன் அவர்களும், இந்தப் பள்ளியின் பழைய மாணவர் என்ற வகையில் இந்தப் பள்ளிக்குப் பெருமைச் சேர்த்தார்கள். இதுபோன்று இப்பள்ளியில் படித்து சிறந்து விளங்கி பலர் அரசியல் ஆளுமையாக இருந்திருக்கி றார்கள். இலக்கியத்துறையில் சாதனைப் புரிந்திருக்கி றார்கள். தொழில்துறையில் நிபுணர்களாக இருந்திருக்கி றார்கள். இப்படிப் பல விற்பன்னர்களை இந்தப்பள்ளி உலகிற்கு தந்திருக்கிறது. அதேப்போல் இன்றைக்கு இந்தப் பள்ளியில் படிக்கிற நீங்கள் எதிர்காலத்தில் மிகப் பெரிய அளவில் வரவேண்டும் என்பதில் இறுவேறு கருத்துகள் இருக்கவே முடியாது.

வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பள்ளிகளின் வளர்ச்சிக்கு குறிப்பாக கல்வி வளர்ச்சிக்கு எந்தளவுக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு, அரசுப் பள்ளிகளாக இருந்தாலும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளாக இருந்தாலும், பகுதி அளவில் அரசு உதவிப்பெறுகிற பள்ளிகளாக இருந்தாலும் எந்த அளவிற்கு முக்கியத்து வம் கொடுக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாகவே அறிவீர்கள்.

**முதல்வரின் காலை உணவுத் திட்டம்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றப் பிறகு அரசுப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு காலை உணவுத்திட்டம் என்பதை அறிமுகப்படுத்தியதால், இன்றைக்கு அதில் சற்றொப்ப 21 லட்சம் மாணவர்கள் உணவருந்தி சிறப்பாகப் படிக்கிற சூழ்நிலை என்பது தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்த முன்வந்திருக்கி றார்கள். ஏன், உலக அளவில் பல்வேறு நாடுகளிலும்கூட தமிழ்நாட்டின் காலைஉணவுத் திட்டத்தை கனடா, இலங்கைப் போன்ற நாடுகளும் பின்பற்ற முனைந்திருக்கி றார்கள்.

அதேபோல் உயர்க்கல்வியிலும், அரசுக் கலைக்கல்லூரிகளில் படிக்கிற மாணவிகள் பயனடைகிற வகையில் மாதந்தோறும் ரூ.1000 வழங்குகிற திட்டமும் செயல்படுத்தப்பட்டு கடந்த இரண்டாண்டுகளில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 ரூபாய் உதவித்தொகைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்தாண்டு மாணவிகளுக்கு மட்டுமே இருக்கின்ற இந்தத் திட்டம் மாணவர்களுக்கும் தமிழ்ப்புதல்வன் என்கிற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு ஒப்புதல் அளித்து அரசாணைப் பிறப்பிக்கப்பட்டு அதற்கான ரூ.360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேப்போல் பன்னிரெண்டாம் வகுப்புப் படித்தப்பிறகு என்ன படிக்கலாம், எதைப் படித்து உயரலாம் என்பதற்கு வழிகாட்டுதல்களும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தும், ‘நான் முதல்வன்’ எனும் சீரியத் திட்டத்தின் மூலம் 28 லட்சம் மாணவர்கள் கடந்த இரு ஆண்டுகளில் பயனடைந்திருக்கிறார்கள்.

**பள்ளிகளை மேம்படுத்தும் தமிழ்நாடு அரசு!**

அதைக்காட்டிலும் விளையாட்டுத்துறையிலும் உலக அளவில் சாதனைப்படைப்பதற்கு விளை யாட்டுத்துறையிலும் மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு வழிக் காட்டிக்கொண்டிருக்கிறது. அதேப்போல் இன்றைக்கு அரசுப் பள்ளிகளில், அரசு உதவிப்பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் தமிழ்நாடு அரசு உதவிக்கொண்டிருக்கிறது.

அதேப்போல் இந்தப் பள்ளி கல்விச்சேவையில் கடந்த நூறாண்டு களில் சிறப்பான வகையில் ஆற்றி வருகிறது. மாணவர்களாகிய நீங்கள் விளை யாட்டுக்களில் சிறந்து விளங்கினால் உடற்பயிற்சிக்கான ஊக்கத்தைப் பெறலாம், மாணவர்களுக்கான தனிமனித ஒழுக்கம் மேம்ப டும். நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் அதிகரிக்கும் என்பதைமகிழ்ச்சியுடன் எடுத்துக்கூறி இப்பள்ளியில் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிற மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகத்தினர் அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்களை, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. அண்ணாதுரை

### ஜூலை 29 (2014)



**வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.**

**நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் அ. மகாதேவன்

### ஜூலை 29 (2013)



**சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணியாற்றியவர். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று கழகத்தினை வளர்த்தவர்.**

**ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**“பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த இவர், அந்தகாலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக பணியாற்றியவர்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்..**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**